# பத்தாம் வகுப்பு
## சமூக அறிவியல்

**நேரம்: 2 1/2** மணி மதிப்பெண்: **100**

**I. சரியான விடையினை தேர்ந்தெடுத்து எழுதுக** 14x1=14

1. ஆங்கில கிழக்கிந்திய வணிகக்குழு தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
   அ) 1600 ஆ) 1664 இ) 1644 ஈ) 1700

2. படைவீரர்கள் வெளிப்படையாகப் புரட்சியில் ஈடுபட்டது
   அ) மீரட் ஆ) பாரக்பூர் இ) ப்ரெய்லி ஈ) கான்பூர்

3. இந்திய சமஸ்தானங்களை இணைக்கும் பணியை மேற்கொண்டவர்
   அ) டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார் ஆ) டாக்டர் இராஜேந்திர பிரசாத்
   இ) இராஜாஜி ஈ) சர்தார் வல்லபாய் படேல்

4. டாக்டர். முத்துலட்சுமியின் சீரிய முயற்சியால் புற்றுநோய் மருத்துவமனை தொடங்கப்பட்ட இடம்
   அ) அண்ணா நகர் ஆ) செங்கல்பட்டு
   இ) காஞ்சிபுரம் ஈ) அடையார்

5. இந்தியா அதிகப்படியான நம்பிக்கையை கொண்டிருப்பது
   அ) போர் ஆ) அமைதி
   இ) அன்பு ஈ) பகைமை

6. நமது நாட்டின் பழங்கால சமயம்
   அ) வேதச்சமயம் ஆ) கிருத்துவம்
   இ) இஸ்லாம் ஈ) ஜொராஸ்டிரியனிஸம்

7. உலக நுகர்வோர் நாள் கொண்டாடப்படுவது
   அ) மார்ச் 15 ஆ) மார்ச் 16
   இ) மார்ச் 14 ஈ) மார்ச் 11

8. இந்தியாவின் கிழக்கு பகுதியில் -------- சூழப்பட்டிருக்கின்றன.

   (அ) வங்காள விரிகுடா (ஆ) அரேபியன் கடல்
   (இ) இந்திய பெருங்கடல் (ஈ) கேரளா

9. மிகப் பெரிய சதுப்பு நில காடுகளின் அமைவிடம்
   (அ) பிச்சாவரம் (ஆ) முட்டுக்காடு
   (இ) சுந்தரவனம் (ஈ) டிராய்

10. தென்மேற்கு பருவக்காற்று வீசும் காலம்
அ) ஜூன் முதல் செப்டம்பர் வரை
ஆ) செப்டம்பர் முதல் அக்டோபர் வரை
இ) டிசம்பர் முதல் பிப்ரவரி வரை
ஈ) மார்ச் முதல் மே வரை

11. டிஸ்க்கோ (TISCO) சார்ந்த துறை
அ) தனியார் துறை (ஆ) கூட்டு துறை
இ) கூட்டுறவு துறை (ஈ) பொது துறை

12. நாட்டு வருமானத்தின் மற்றொரு பெயர் -------
அ) உண்மை வருமானம் (ஆ) பண வருமானம்
இ) மொத்த நாட்டு உற்பத்தி (ஈ) பெயரளவு வருமானம்

13. இந்திய பிரதமர் நேரு, இந்தியப் பொருளாதாரம்
அ) கலப்பு பொளாதாரமாக அமைய விரும்பினார்
ஆ) சமதர்ம பொருளாதாரமாக அமைய விரும்பினார்
இ) முதலாளித்துவ பொருளாதாரமாக அமைன விரும்பினார்
ஈ) பணப் பொருளாதாரமாக அமைய விரும்பினார்.

14. பசுமைப் புரட்சி நடைமுறைபடுத்தப்பட்ட ஆண்டு
அ) 1967 ஆ) 1977
இ) 1987 ஈ) 1957

II. <u>பொருத்துக:</u> 10x1=10

15. உட்ரோ வில்சன் – இரஷ்யா
16. ஸ்வஸ்திகா – காமராஜர்
17. அழித்துப் பின் வாங்கும் கொள்கை – நாசிச சின்னம்
18. கேசரி – சத்தியமூர்த்தி
19. அரசரை உருவாக்கியவர் – திருமதி.அன்னிபெசன்ட்
– அமெரிக்கா
– பாலகங்காதர திலகர்

**பொருத்துக**

20. கரிசல் மண் – சென்னை
21. நிலக்கரி – பருத்தி
22. தென்னக இரயில் வழி – நெடுக்காக செல்லும் தீர்க்கக் கோடு
23. செயற்கை கோள் வரிசை – ஜார்கண்ட்
24. 82 1/2 E – புவி நிலைய செயற்கை கோள்
– தமிழ்நாடு
– ஜீரீயா

**III. ஏதேனும் பத்து வினாக்களுக்கு சிறுவிடை தருக** **10x2=20**

('அ' பிரிவிலிருந்து நான்கு, 'ஆ' பிரிவிலிருந்து ஒன்று 'இ ' பிரிவில் நான்கு மற்றும் 'ஈ' பிரிவில் ஒன்று)

**பிரிவு 'அ'**

25) . சீனா பன்னாட்டு குடியேற்ற நாடாக எவ்வாறு மாறியது ?
26) . பாசிசத்தின் நான்கு தூண்கள் யாவை ?
27) . யூரோவின் முக்கியத்துவம் யாது ?
28). சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்களின் விளைவுகள் இரண்டினை குறிப்பிடுக
29). 1929ஆம் ஆண்டு லாகூர் காங்கிரஸ் மாநாட்டில் இயற்றப்பட்ட தீர்மானங்கள் யாவை ?
30) . திருப்பூர் குமரன் பற்றி சிறுகுறிப்பு எழுதுக

**பிரிவு 'ஆ'**

31) .உலக அமைதி ஒரு அவசியமானது ஏன் ?
32). மனித இனத்தின் அருங்காட்சியகம் என இந்தியர்கள் அழைக்கப்படுவதேன் ?

**பிரிவு 'இ'**

33). பல்நோக்கு வளம் விளக்குக.
34). வட இந்தியாவில் கோதுமை ஏன் பயிரிடப்படுகின்றது என்பதற்கான காரணங்களை தருக.
35). சர்க்கரை தொழிற்சாலைகள் கரும்பு விளையும், விளை நில பரப்பிற்கு அருகில் அமைந்ததற்கான காரணங்களை தருக.
36). குழாய் வழி போக்குவரத்தின் இரண்டு பயன்களை தருக.
37). பாதக வர்த்தக சமநிலையினை விவரி
38). தொலை நுண்ணுணர்வை விவரி.

**பிரிவு ' ஈ'**

39) தலா வருமானம் என்றால் என்ன ?
40) உலகமயமாதல் – சிறு குறிப்பு வரைக

**IV. கீழ்கண்ட தலைப்பு இரண்டினை தேர்ந்தெடுத்து அவற்றின் அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **2 x 4 = 8**

41) பால்கன் பிரச்னை

அ) பால்கன் நாடுகளைக் குறிப்பிடுக
ஆ) முதல் பால்கன் போர் எவ்வாறு முடிவுக்கு வந்தது ?
இ) ஏனைய பால்கன் நாடுகள் பல்கேரியா மீது ஏன் போர் தொடுத்தன ?.
ஈ) இரண்டாம் பால்கன் போரின் முடிவு என்ன ?.

42) ஐ.நா.வின் முக்கிய சாதனைகள்

அ) ஐ.நா. செய்து கொண்ட முக்கிய உடன்படிக்கைகளை குறிப்பிடுக

ஆ) சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டு மாநாடு எங்கு நடத்தப்பட்டது ?

இ) அனைத்து நாடுகளும் எதனை ஏற்றுக் கொண்டன ?

ஈ) சூயஸ் கால்வாய் பிரச்னையை ஐ.நா. எவ்வாறு முடிவுக்கு கொண்டு வந்தது ?

43) இராமகிருஷ்ண மடம்

அ) இராமகிருஷ்ண பரமஹம்சர் என்பவர் யார் ?

ஆ) இராமகிருஷ்ண மடத்தினை நிறுவியது யார் ?

இ) உலக சமய மாநாடு எங்கு, எப்போது நடைபெற்றது ?

ஈ) உலக சமய மாநாட்டில் இந்து சமயத்தின் பிரதிநிதியாக கலந்து கொண்டவர் யார் ?

44. நீதிக்கட்சி

அ). நீதிக்கட்சியை தோற்றுவித்தவர் யார்.

ஆ). நீதிக்கட்சி எப்போது ஆட்சிக்கு வந்தது.

இ). நீதிக்கட்சி எப்போது தோற்கடிக்கப்பட்டது.

ஈ). நீதிக்கட்சியின் சாதனைகள் இரண்டினை எழுது

V. **ஏதேனும் நான்கினை வேறுபடுத்தி காட்டு** **4 x 2 = 8**

45. மேற்கு கடற்கரை சமவெளி மற்றும் கிழக்கு கடற்கரை சமவெளி.

46. கோடைகால வெப்பநிலை மற்றும் குளிர்கால வெப்ப நிலை.

47. கரிசல் மண் மற்றும் வண்டல் மண்.

48. கோடை கால பயிர் மற்றும் குளிர் கால பயிர்.

49. சிறுதொழில் மற்றும் குடிசை தொழில்.

50. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி.

பகுதி இ

VI . பிரிவு அ, ஆ, இ மற்றும் ஈ ஆகிய பிரிவுகள் ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும் ( விடை ஒரு பத்தியில் அமைதல் வேண்டும்.) **4x 5= 20**

**பிரிவு – அ**

51. பிராங்க்களின் டி.ரூஸ்வெல்ட் அறிவித்த நிவாரணம், புணரமைப்பு மற்றும் சீர்த்திருத்தங்கள் பற்றி விரிவான விடையளி.

52. உப்பு சத்தியாகிரகம் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

53. பஞ்சசீலம் மற்றும் அணிசேராக் கொள்ளை பற்றி எழுதுக.

**பிரிவு ஆ**

54. ஜனநாயகத்தில் எதிர்க்கட்சியின் பங்கை விளக்குக.

55. நுகர்வோரைப் பாதுகாக்க தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைக்கள் யாவை.

56. உலக அமைதிக்கு இந்தியாவின் பங்கு யாது.

### பகுதி இ

57. இமாத்ரி – விவரி
58. சாலை வழி போக்குவரத்தின் நன்மைகளை பட்டியலிடுக.
59. புவியியலில் அடைவிடங்களை கண்டறியும் முறையின் (GPS) முக்கியத்துவத்தை விவரி.

### பகுதி ஈ

60) நாட்டு வருமானத்தின் அடிப்படைக் கருத்துகளை விவரி ?
61) பசுமைப் புரட்சியை விவரி ?
62) தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் முன்னேற்ற திட்டங்களை விவரி ?

**VII. கீழ்கண்டவற்றிற்கு காலக்கோடு வரைக (5 மதிப்பெண்)**

63. 1920 மற்றும் 1935 ஆண்டுகளில் நடைப்பெற்ற ஏதாவது ஐந்து முக்கிய நிகழ்வுகள்

**VIII கீழ்கண்டவற்றுள் ஐந்தினை வரைபடத்தில் குறி ( 5 மதிப்பெண்)**
**( ஆசிய வரைப்படத்தில் 2ம் மற்றும் இந்திய வரைபடத்தில் 3ம் தேர்ந்தெடு)**

64. ஆசிய வரைபடத்தில் கீழ்கண்டவற்றினை குறி
அ. பீகிங் ஆ. ஹாங்காங் இ. கேன்டன் ஈ. பார்மோசா
(அல்லது)
65. இந்நிய வரைபடத்தில் கீழ்கண்டவற்றினை குறி
அ. பாராக்பூர் ஆ. சௌரி செரளா இ. சூரத் ஈ.மீரட்

**IX ) கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் ஏதேனும் ஐந்து இடங்கள் / பகுதிகள் குறியிட்டு ஓரிரு வாக்கியங்கள் எழுதுக. (10 மதிப்பெண்கள்)**

1. மவுண்ட் எவரஸ்ட்
2. கங்கை நதி
3. வண்டல் மண் காணப்படும் இடம்
4. பாலைவனம்
5. தென் இந்தியாவில் தேயிலை பயிரிடப்படும் பகுதி
6. மும்பாய்
7. சென்னை துறைமுகம்